**05.09.2019 அ.வ.எண். 56/2015 வா.த.சா. 1 ஜாருமா**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரங்களை நான் பார்த்துள்ளேன். எனது தாயார் குறிப்பிட்டதன் பெயரில் சொத்து விவரங்கள் குறிப்பிடப்பட்டது. தாவா சொத்தின் விவரங்களை நாங்கள் அளந்து பார்த்து தற்போது ஜக்குபந்தி விவரங்களை அறிந்து வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் வழக்கறிஞர் உதவியுடன் நாங்கள் தாவா சொத்தை அளந்து பார்த்தோம். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அடிப்படையில் வழக்கு சொத்தை அளந்துபார்த்தோம். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ1ல் உள்ள ஆவணத்தின் படி அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. தற்போது உள்ள சொத்தின் படி அளந்து பார்த்து விவரங்களை குறிப்பிட்டோம். எனது தகப்பனார் வைத்திருந்த ஆவணத்தை தான் நாங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்தோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அக்கா வழங்கறிஞரிடம் கொடுத்தார். நான் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில்தான் உள்ளேன். வா.த.சா.ஆ 1ல் உள்ள ஆவணம் காத்துன் பீ என்பவருக்கு அவரது கணவர் தக்கை அலி சாயபு என்பவர் எழுதிகொடுத்த கிரைய பத்திரம் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. 12.04.1910 அன்று ரசாலி சாயபு என்பவர் அவரது மகன் தக்கை அலி சாயபு என்பவருக்கு கிரைய பத்திரம் எழுதிகொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் தான் வா.ாச.ஆ1 மூலம் தக்கை அலி சாயபு என்பவர் அவரது மனைவிக்கு எழுதிகொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் எனது சகோதரிக்குதான் தெரியும். எனக்கு தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராதை நான் படித்து பார்த்துள்ளேன். நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் காத்துன் பீ மற்றும் அவரது கணவர் இறந்து போன பின்பு அவர்களது வாரிசுகளுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளோம் என்றும், அதற்கான ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கு தெரியாது. எனது அக்காவிற்கு தான் தெரியும். குறிப்பாக அந்த பாகப்பிரிவினை எற்பட்ட து என்ற விவரம் எனக்கு தெரியாது. வாய்மொழியாக அவர்களுக்கு பாகபிரிவினை எற்பட்டதாக எனது தாயார் கூறியதில் பேரில் எனக்கு தெரியும். எனக்கும் எனது தாயாருக்குமிடையே சுமூக உறவு இருந்து வருகிறது. எனது தாயாருக்கு வழக்க விவரங்கள் நன்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். எங்களது தாயாரை இவ்வழக்கில் சாட்சியாக எங்களால் விசாரிக்க முடியும். குன்னா சாயபு என்பவரை தவிர மற்ற பாகஸ்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை குறித்து நான் பிராதில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக வா.த.சா.ஆ 1 பத்திரங்கள் தவிர வேறு பத்திரங்கள் ஏற்பட்டதை பற்றி எனக்கு தெரியவில்லை. எனது தாயார் ஒரு பத்திரம் ஏற்பட்டதை பற்றி மட்டுமே என்னிடம் குறிப்பிட்டார். சாத்தும் பீ நான் கிரையம் பெற்ற சொத்தை குன்னா சாயபு, சாத்து சாயபு, தக்கை அலி சாயபு, சோர்த்து சாயபு ஆகியோர்களுக்கு தனித்தனியாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கிரையம் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டதான விவரம் மட்டுமே எனக்கு தெரியும். சோர்த்து சாயபு என்பவருக்கு பாகமாக கிடைத்த சொத்தை நவாப்ஜான் என்பவருக்கு கிரையம் செய்து

கொடுத்ததன் பேரில் அவர் தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் உள்ள கடைசி பாகத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். சத்து சாயபு என்பவரின் பாகத்தை 4 ம் பிரிதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். சத்து சாயபு பாகத்திற்கு மேற்கு பகுதியில் உள்ள எனத தாத்தா சம்ஷர் அலி என்பவரின் பாகம் என்ளும் அதையும் 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்குபகுயில் கடைசியாக அமைந்துள்ள பாகம் தக்கை அலி சாயபுவின் பாகம் என்று சொன்னால் சரிதான். அதையும் 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். குன்னா சாயபு (எ) சம்சர் அலி என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான் அவரது முதல் மனைவியின் பெயர் கத்தீஜா என்றும் இரண்டாவது மனைவி சோட்டிமா பீ என்று சொன்னால் சரிதான். குன்னா சாயபு (எ) சம்சர் அலியின் பாகத்தை அவரது வாரிசுகள் சேர்ந்து முழுவதுமாக 4ம் பிரதிவாதியின் தாயாருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவரது வாரிசுகள்அனைவரும் கையொப்பம் இட்டதாகவும், கிரைய தொகை வாங்கி பகிர்ந்து கொண்டதாகவும் நான் கேள்விபட்டேன். எவ்வளவு அளவு கொண்ட பாகத்தை கிரையம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. குன்னா சாயபு என்வருக்கு அவரது முதல் மனைவி மூலமாக அமுலு பீவி, பீபீ ஜான், துலாரி பேகம், ஜனிபா பேகம், ஜாமினா பேகம் ஆகிய ஐந்து மகள்களும், காதர் அலி, அலிஜான், அம்ஜத் அலி ஆகியோர் பிறந்தனர் என்று சொன்னார் சரிதான். அவரது 2வது மனைவி சோட்டிமா பீவி மூலமாக அசன் அலி மற்றும் குலாப் ஜான் ஆகியோர் பிறந்தனர் என்று சொன்னால் சரிதான். காதர் அலி என்பவரின் மகன்கள் அலிஷேர், பகதூர் அலி மற்றும் குல்ஜார் என்ற மகள் என்று சொன்னால் சரிதான். குல்ஜார் என்பவர் கடந்த 20 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அலிஜான் சாயபுவின் மனைவி என்று சொன்னால் சரிதான். அவர்களுக்கு யூசுப் அலி, யாகூப் அலி, ஜரினா பேகம், ஷம்ஷாத், அயூப் அலி மற்றும் நான் ஆகியோர் வாரிசுகள் ஆவார். எனது தகப்பனார் 1982ம் வருடம் காலமானார். எனது தகப்பனார் காலமான பிறகு 1984ம் வருடம் குன்னா சாயபுவின் வாரிசுகள் அனைவரும் 4ம் பிரதிவாதியின் தாயார் அபியுன்னிஷா என்பவருக்கு குன்னா சாயபுவின் பாகத்தை கிரையம் கொடுத்தனர் என்று சொன்னால் சரிதான். 1984ம் வருடம் ஏற்பட்ட கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்ததில்லை. அவ்வாறு எனது தாயார் கூறியதன் பேரில் எனக்கு தெரியவந்தது. அந்த கிரைய பத்திரத்தில் எனது தாயார் அவரது மைனர் மக்களின் கார்டியனாக இருந்து கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் நாங்கள் சிறுவர்களாக இருந்தோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்தள்ள பிராதில் 25.01.1984 அன்று ஏற்பட்ட கிரைய பத்திரம் சம்மந்தமாக 25.01.1994 என தவறாக தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். குன்னா சாயபுவின் 14 வாரிசுகள் அனைவரும் சேர்ந்து கிரைய பத்திரம் எழுதிகொடுத்துள்ளனர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**